**பெலிஅத்த பிரதேச சபை**
**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தம்பர் 26 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பெலிஅத்த பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்கள் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் தொழிற்சாலை கடன் கொடுத்தோருக்காக ரூபா 47,857 தொகை கூடுதலாக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ரூபா 46,059 தொகையான செலவினங்களுக்காக கடன் கொடுத்தோர் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள நானாவித வைப்புக்கள், காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் செலவினம் கடன் கொடுத்தோர் ஆகிய 03 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய புத்தகங்கள் மற்றும் பட்டோலைகளில் காண்பிக்கப்படும் மீதிகளுக்கு இடையேயான சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 516,947 ஆகும்.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

i. 2011 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய தொழிற்சாலை உதவு தொகைகளின் கூட்டுத்தொகை ரூபா 9,419,864 ஆக இருந்ததுடன், அந்த பணம் மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

ii. 2013 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,175,689 கூட்டுத்தொகையான வாகன வாடகை வருமானம் மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

iii. 1997 - 2000 ஆம் ஆண்டுகளுக்குரியதாக தங்கல்ல மாவட்ட அலுவலகத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த ரூபா 519,632 கூட்டுத்தொகையான சந்தை வரி மற்றும் ஊழியர் கடன் பணம் மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

i. பெக்கோ இயந்திரத்திற்காக உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 08 மில்லியன் தொகையான கடன் பணத்தில் 2012 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 752,511 கூட்டுத்தொகையான கடன் தவணைப்பணம் மற்றும் வட்டி மீளாய்வாண்டின் போதும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ரூபா 21,911,377 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மீதியினுள் 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா 4,702,025 கூட்டுத்தொகையான தொழிற்சாலைக் கடன்கொடுத்தோர் மீதி மற்றும் ரூபா 5,389,823 கூட்டுத்தொகையான செலவினம் கடன்கொடுத்தோர் மீதியினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும், இந்த செலவினம் கடன்கொடுத்தோர் மீதியினுள் தொடர்ந்தும் தீர்க்கப்படாதிருந்த ரூபா 4,942,100 தொகையான ஓய்வூதியப் பணிப்பாளருக்கு செலுத்த வேண்டிய செலவினமொன்றும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 247,838,588 கூட்டுத்தொகையான காணி, கட்டிடங்கள், இயந்திர உபகரணங்கள், மோட்டார் வாகனங்கள் வாகனங்கள் மற்றும் வண்டி மற்றும் தளபாடங்களைப் பொருத்ததல் தொடர்பில் நானதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் விரிவான பட்டோலைகள், ரூபா 16,968,087 தொகையான உள்நாட்டு கடன், அபிவிருத்தி நிதியத்திற்குரிய மீதி சான்றுறுதிப்படுத்தல் கடிதம், ரூபா 13,936,026 கூட்டுத்தொகையான நானாவித வைப்புகளுக்குரிய நாளதுவரையாக்கப்பட்ட வைப்புப்பதிவேடு, ரூபா 1,040,799 தொகையான நிலுவை வாகன வாடகை பணத்திற்குரிய பயன்பாட்டுப் பதிவேடுகள் மற்றும் காலப்பகுப்பாய்வு, ரூபா 519,632 தொகையான வழக்குகளை தாக்கல் செய்தமையின் மூலம் அறவிடப்பட வேண்டிய பணத்திற்குரிய வழக்குப் பதிவேடு, ரூபா 120,652 தொகையான களஞ்சிய கன இருப்பு பட்டோலை போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேசபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக்கோவை | |
| விதி 193 | பாதிடப்பட்ட நிதியேற்பாடு மற்றும் குறைநிரப்பு அங்கீகாரத்துடன் இணக்கம் செய்து ஒவ்வொரு வருமான விடயம் மற்றும் செலவின விடயத்தின் |

| | |
|---|---|
| | கீழான மிகைகள் அல்லது பற்றாக்குறைகள் தொடர்பான விடயங்களை விளக்கும் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| i. நிதிப்பிரமாணம் 571(3) | வைப்புச் செய்து 02 வருடங்கள் கடந்திருந்த ரூபா 847,542 கூட்டுத்தொகையான 51 வைப்பு மீதிகளை ஒழிப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. நிதிப்பிரமாணம் 880 | பிணை வைக்க வேண்டிய 19 உத்தியோகத்தர்களினால் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) அரச நிர்வாக சுற்றறிக்கை | |
| 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 12 வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,555,250 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,189,127 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 7,366,123 ஆன அதிகரிப்பொன்றினைக் காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் மொத்த மீண்டெழும் வருமானத்தில் 85 சதவீதமான உயர்வான பெறுமானத்துடனான செலவினங்கள் காணப்பட்டதுடன், அது நிதி முகாமைத்துவம் தொடர்பில் திருப்திகரமான நிலையொன்றல்ல என்பதை பிரதிபலித்தது.

(ஆ) ஒவ்வொரு வருடமும் சபையின் சுயமாக ஈட்டப்பட்ட வருமானத்தின் அளவினை மிகைத்து கவனத்திற் கொள்ளக்கூடிய அளவில் மீண்டெழும் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வருமானத்தின் உதவி கிடைத்திருக்காவிடின் சபையின் வருமானத்தில் எந்த விதத்திலும் மீண்டெழும் செலவினத்தை ஈடுசெய்ய முடியாத நிலையொன்று உருவாகியுள்ளதாகவும், செலவினத்தை கட்டுப்படுத்தல் தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை காட்டியது.

**2.3 செயற்படு மூலதன முகாமைத்துவம்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான 4 முதல் 5 வருடங்களுக்கிடைப்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்படும் தொழிற்சாலை உதவு தொகைகள் மற்றும் வாகன வாடகை மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,595,553 ஆனமையால் நடைமுறை மற்றும் விரைவு விகிதங்களின் பிரகாரம் திரவத்தன்மை நிலைமையொன்று இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2.4 வருமான நிருவாகம்**

**2.4.1 வருமானம் சேகரித்தலினான செயலாற்றல்**

மீளாய்வாண்டினுள் சபையின் வருமானம் சேகரித்தலின் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட மொத்த மீண்டெழும் வருமானம் ரூபா 37.98 மில்லியனாக இருந்ததுடன், அவற்றுள் ரூபா 21.05 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், வருமானம் சேகரித்தலின் செயன்முன்னேற்றம் 55 சதவீதம் மாத்திரமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பெற வேண்டிய வருமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24.58 மில்லியனாக இருந்ததுடன், அவற்றுள் 11.73 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், நிலுவை வருமானத்தை அறவிடலின் செயன்முன்னேற்றம் சுமார் 48 சதவீதமாகும்.

**2.4.2 வீதவரியும் வரியும்**

ஆரம்ப நிலுவையில் 41 சதவீதம் மற்றும் ஆண்டிற்கான பட்டியலிடல்களின் 77 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான நிலுவை மீதி ரூபா 1,336,870 எனும் உயர்வான பெறுமதியினை கொண்டிருந்தது. நிலுவை குத்தகையினை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 (1) (அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4.3 குத்தகை வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 2,562,149 கூட்டுத்தொகையான ஆரம்ப நிலுவை மீதியில் 26 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டமையால் ஆண்டின் இறுதியில் நிலுவை மீதி ரூபா 2,576,789 ஆகும். நிலுவை வாடகையினை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159 (1) ஆம் பிரிவிற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் காணப்படும் சந்தர்ப்பங்களில் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(i) பண்டாரவத்த பொதுச்சந்தையின் 20 கடைகள் மற்றும் வாசிகசாலை உதவிக் கட்டிடத்தில் அமைந்துள்ள 25 கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது சுற்றிக்கையின் 01 ஆம் இலக்க பந்திக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) புதிய சந்தைக் கட்டிடத்தின் 30 கடைகள், புதிய அலுவலக கட்டிடத்தின் 10 கடைகள் மற்றும் பண்டாரவத்த பொதுச்சந்தையின் 20 கடைகள் தொடர்பில் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்திக்கமைய 03 வருடங்களுக்கு ஒரு தடவை உடன்படிக்கை நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சேகரிக்கப்படும் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக பெற வேண்டிய சேகரிப்பு பணத்தின் கூட்டுத்தொகை ரூபா 12,342,266 ஆகும். 2017 யூலை 31 ஆந் திகதியளவில் அந்த பணத்தில் 17 கடைகளுக்காக ரூபா 2,579,600 தொகை தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது.

(iv) சுற்றிக்கையின் 02 மற்றும் 04 ஆம் இலக்க பந்திகளிலுள்ள ஏற்பாடுகளை பின்பற்றி பண்டாரவத்த பொதுச் சந்தையின் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கு 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும், ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நீதிமன்ற தண்டப் பணத்திற்காக ரூபா 389,129 தொகையும், முத்திரைக் கட்டணங்களுக்காக ரூபா 12,919,101 தொகையும் பெற வேண்டியதாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது இரு தொழிற்சாலைகளுக்காக ரூபா 1,350,000 தொகையான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த நிதியேற்பாடு முழுமையாக எஞ்சியிருந்தது.

(ஆ) தென் மாகாண சபையின் அபிவிருத்தித் திட்டம் - 2016 அமைச்சருக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் பொது கிணறு ஒன்றினை நிர்மாணிப்பதற்காக ரூபா 150,000 தொகையான பணம் 2017 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தினுள் சபைக்கு கிடைத்திருந்த போதிலும், 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மதிப்பீடு செய்யப்பட்ட பணம் ரூபா 620,000 தொகையான 03 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 333,050 தொகையான பணம் செலவிடப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 02 செயற்திட்டங்கள் 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) 01 முதல் 04 வருடங்கள் வரையான காலமாக பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த 11 பல்வேறு சொத்து அலகுகள் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) ரூபா 4,455,200 கிரயமான சபைக்கு சொந்தமான 03 வாகனங்கள் 01 முதல் 03 வருடங்கள் வரையான காலமாக பயன்படுத்தப்படாமல் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

(அ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து 2014 நவம்பர் 13 ஆந் திகதி கிடைத்து பிரதேச சபையில் பொருட்பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்த 600 கொடிக்கம்பங்களில் 279 கொடிக்கம்பங்கள் சபையின் பொறுப்பில் காணப்படவில்லை.

(ஆ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு முன்மொழிவின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட வறுமைக்குறைப்பிற்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள 10 கொட்டகைகள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிராததுடன், 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அவற்றுள் 04 கொட்டகைகள் சபையின் பொறுப்பில் காணப்படவில்லை.

**3.4 வாகனக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான 09 வாகனங்களுக்காக மீளாய்வாண்டிற்கான வருடாந்த வருமான அனுமதிப்பத்திரங்களும், அவற்றுள் 05 வாகனங்களுக்காக வருடாந்த காப்பீடொன்றும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 12 வாகனங்களில் உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவவதானிக்கப்படுகின்றன.

(அ) மாகாண குரித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி மானியம் - 2016 இன் கீழ் திறந்து வைக்கப்பட்ட கூட்டெரு நிலையமொன்று, வடிகாண் கட்டமைப்பொன்று, மற்றும் நீர்த்தாங்கியொன்றினை நிர்மாணிக்கும் மதிப்பீட்டின் 03 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் வீட்டுத்தளத்திற்கு கொன்கிறீட் இடும் போது பூர்த்தி செய்யப்படாத 12.95 கன மீட்டர்களுக்காக ரூபா 191,051 தொகை கூடுதலாக செலுத்த நேர்ந்திருந்தது.

(ஆ) மேற்படி பணிக்குரிய மதிப்பீட்டின் 15, 16, 17, 18 மற்றும் 19 ஆம் இலக்க வேலை விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிராததுடன், அதற்காக ரூபா 15,921 தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்தது.

**3.6 திண்மக்கழிவு முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கூட்டெரு விற்பனை மூலம் ரூபா 149,320 தொகையான வருமானம் ஈட்டப்பட்டிருந்த போதிலும், கழிவு வரியினை விதித்து செலவினங்களை ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்வரும் பிரமாணக்குறிப்புகள் மற்றும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(i) சேதனைப் பசளையை உருவாக்குவதற்கு பயன்படுத்த முடியாத மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய ஏனைய திண்மக் கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தல்.

(ii) போதியளவான தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் வசதிகள் செயற்பாட்டுத் தளத்தில் தாபித்தல்.

(iii) கூட்டெரு உற்பத்தி வாகனத்தினுள் சிறந்த நல்லாளுகையை பேணுதல்.

**3.7 பதவியணியினர் நிர்வாகம்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய பதவிகளில் 10 மற்றும் 39 பேருக்கான மிகைகள் மற்றும் 06 மற்றும் 10 பதவிகளின் பற்றாக்குறையொன்றும்

நிலவியது. மிகை பதவிகளை முறைமைப்படுத்துவதற்கும் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களித்தமைமையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

06 செலவின விடயங்களின் ரூபா 14,762,607 தொகையான சேமிப்பும், 02 வருமான விடயங்களின் அடையப்படாத ரூபா 7,243,099 தொகையான இலக்குகளும் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு